1995 ஏப்ரல் 21]

388—

பெரம்பூர் தொகுதியில் மின் தடையைத் தடுத்தல்

14464*—டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னை பெரம்பூர் தொகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சிற்சில சமயங்களில் ஏற்படும் மின் தடைகள் கீழ்க்கண்ட காரணங்களினால் ஏற்படுகிறது. மின் உற்பத்திக் குறைவு காரணமாக சிலசமயங்களில் மின் கட்டமைப்பில், அதாவது கிரிட்டில் பளுவைக் குறைப்பதற்காக மின்னோட்ட நிறுத்தம் அமுல்படுத்தப்படுகிறது. That is load shedding. இவ்விதம் மின் நிறுத்தம் பெரம்பூர் பகுதியில் மட்டுமன்றி, சில புறநகர் பகுதிகளிலும் முறைப்படி அமுலாக்கப்படுகிறது. சில நேரங்களில் மின்பாதை மற்றும் புதைவிடங்களில் அவ்வப்போது ஏற்படும் பிரேக்டவுன் காரணமாக மின்தடை ஏற்படும். அதுதவிர அவசரப் பராமரிப்புப் பணியை முன்னிட்டும் உப நிலையத்தில் மின்னோட்டம் நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இவை தவிர புதைவிடங்களின் மற்றைய துறையினரால்—மாநகராட்சி, தொலைத் தொடர்பு மற்றும் நெடுஞ்சாலைத் துறையினரால் வேலை செய்யும்போது, அந்தக் கேபிள்களில் வேலை செய்யும்போது சில நேரங்களில் மின்தடை ஏற்படும். ஆகவே மின்தடை ஏற்படுவதற்கு இதுபோன்ற காரணங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது பெரம்பூர் பகுதியைப் பொறுத்தமட்டில், பெரியார் நகரில் 31–3–1993 அன்று இயக்கம் செய்யப்பட்டுள்ள 33/11 கே.வி. துணை மின் நிலையம் இயங்க ஆரம்பித்தவுடன் பெரியார் நகர், ஜவஹர் நகர், பேப்பர் மில்ஸ் ரோட்டின் ஒரு பகுதி, லட்சுமிபுரம், ஜி.கே.எம். காலனி, கொளத்தூர், அகரம் ஆகிய பகுதிகளில் மின்னழுத்தம் அபிவிருத்தி அடைந்துள்ளது. இதேபோல் புழல் பகுதியில் 110/11 கே.வி. துணை மின் நிலையம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

21-7-1993 அன்று இயங்க ஆரம்பித்திருக்கிறது. செம்பியம் பகுதியில் 110/33/11 கே.வி. துணை மின் நிலையத்தின் பளு வெகுவாகக் குறைக்கப்பட்டுவிட்டதால் அதன்மூலம் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மின் அழுத்தம் தற்போது சீராக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எம்.பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1993ஆம் ஆண்டு போட்ட கேள்வியாகும். இருந்தபோதிலும் மின் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை மலரச் செய்து, பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைத் தீட்டி, இன்று நீர், நெருப்பு, காற்று ஆகியவை மூலம் மின் உற்பத்தியைப் பெருக்கி, மின் பற்றாக்குறையைப் போக்கி, தமிழகத்தில் தன்னிறைவு நிலையை உண்டாக்கி, உபரி மாநிலமாக ஆக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புயல் வேகத்திற்கு ஈடுகொடுத்து, திறம்படச் செயலாற்றும் மாண்புமிகு மின்துறை மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி. வட சென்னை பெரம்பூரில் பல ஆண்டுகளாகப் புதுப்பிக்கப்படாத பழைய மின் கம்பிகளையெல்லாம் புதுப்பித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 14-9-1992 அன்று போடப்பட்டது. அதற்குப் பின்னாலே நம்முடைய ஆட்சிக் காலத்திலே சென்னை மாநகரில் மின் விநியோகத்தை மேம்பாடு செய்வதற்கான பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்ததற்குப் பின்னாலேதான், இதுபோன்று ஒவ்வொரு பகுதிகளிலும் இன்றைக்கு மின் அழுத்தம் சீராக இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நான் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்த விபரங்களின் அடிப்படையில் அந்தப் பகுதியில் நாங்கள் செய்திருக்கிறோம். மேலும் இரண்டு புதிய மின் மாற்றிகள் பெரம்பூர் பகுதியில் நிறுவப்பட்டதன் மூலம் மொத்தம் 6 மின் மாற்றிகளைப் பெரம்பூர் பகுதியில் புதிதாக நிறுவியிருக்கிறோம். அது தவிர, மாதவரம் நெடுஞ்சாலை, சத்தியவாணிமுத்து நகர் ஆகிய பகுதிகளில் புதிய இரண்டு மின்மாற்றிகளை நிறுவுவதற்கு இப்போது வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே நிறுவப்பட்ட 6 புதிய மின் மாற்றிகள் தவிர, மேலும் ஒரு புதிய மின் மாற்றி வடிவேல் முதலி தெருவிலும் இப்போது நிறுவப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 21]

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் சமீப காலத்தில் சுமார் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறைந்த மின் அழுத்தப் பாதைகள்--எல்.டி.நெட்வொர்க் சீரமைக்கும் பணி நிறைவேற்றப்பட்ட உள்ளது. ஆகவே பழுதடைந்த கேபிள்களை மாற்றவும் குறைந்த அழுத்தக் கேபிள்கள் அதைவிட அழுத்தமுள்ள கேபிள்களாக மாற்றும் திட்டங்கள் ஆராயப்பட்டு, இனிமேல் செயல்படுவதற்கான நடைமுறைகளை மின்சார வாரியம் பின்பற்றி வருகிறது. அது தவிர, மின் பயனீட்டாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு மின் தடை நீக்கப் பணியமைப்பு, அதாவது Fuse-off call centre ஒன்று செம்பியத்திலும் மற்றொன்று பெரம்பூரிலும் வெவ்வேறு ஊர்திகளுடனும் தொலைபேசி வசதிகளுடனும் செயல்படுகிறது. மின் தடை நீக்கப் பணிகளுக்கு என்றே தனிப்பட்ட முறையில் 24 மணி நேரமும் ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தான் சென்னை மாநகர் மின் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு என்று நவீன நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான் ஆங்காங்கே இயற்கையாக மின் தடைகள் ஏற்படுகின்றபோது நம்முடைய மின்சார வாரிய ஊழியர்களுக்கு ஏற்கெனவே வாகன வசதிகளும் ஒயர்லெஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே உடனடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று மின் விநியோகத்தை ஒழுங்குப்படுத்துவதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பேரவை விதிகளின்படி உரிய காலத்திற்குள் கேள்விகளுக்கு பதில் அனுப்பிவைக்க துறை அதிகாரிகளுக்கு அமைச்சர்கள் அறிவுரைகள் வழங்க வேண்டியது குறித்து--பேரவைத் தலைவரின் அறிவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதில்கள் குறித்து ஒரு சிறிய வேண்டுகோள். நம்முடைய பேரவை விதிகளின்படி, கேள்விகள் உரிய துறைகளால் 42 நாட்களுக்குள் பரிசீலிக்கப்பட்டு, நமக்குப் பதில் வரவேண்டுமென்று இருக்கிறது. பொதுப்பணித் துறையைப் பொறுத்த மட்டில் ஏராளமான கேள்விகள் இருக்கின்றன. அதையும் நான் அறிவேன். ஆயிரக்கணக்கான கேள்விகள் பொதுப்பணித் துறையைப் பொறுத்து மட்டும் வருகின்றன.